**திரு. இராம. அரங்கண்ணல் :** கனம் அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்துக்கள் மிகவும் தெளிவுதரத்தக்க வகையிலே, நம்பிக்கை தரத்தக்க வகையிலே இருக்கின்றன. எதிர் காலத்திலே, கூடிய விரைவிலே, இரண்டு அல்லது மூன்று தினங்களுக்குள்ளாக அமைச்சரவர்கள் திருத்தத்தைக் கொண்டு வரவேண்டுமென்று நான் விரும்புகிறேன். அத்தகைய உறுதி மொழி அவர்கள் தருவார்களென்ற நம்பிக்கையில், கூடிய விரைவில் திருத்த மசோதாவை கொண்டுவருவார்கள் என்ற நம்பிக்கையில், அவர் கள் வார்த்தைக்கு மதிப்பு கொடுத்து என்னுடைய திருத்த மசோதாவை நான் வற்புறுத்தவில்லை.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, இதை என்னுடைய அஷ்யூரன்ஸாகக் கனம் அங்கத்தினர்கள் கருதக் கூடாது. எனக்கு அதைப் பற்றி ஆட்சேபம் இல்லை. தாமதித்துக் கொண்டுவர வேண்டுமென்ற எண்ணம் இல்லை. இரண்டு அல்லது மூன்று மாதத்தி ற்குள் இது முடியாது. இதிலே சென்னை யூனிவர்சிடியாரும் சில கருத்துக்களைத் தெரிவிக்கப்போகிறார்கள். அரசாங்கத்திலே முன்பு பரிசீலனை செய்யப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் எடுத்துத் தொகுத்து மசோதா கொண்டுவருவதற்கு நாள் ஆகும். எவ்வளவு சீக்கிரத்தில் கொண்டுவர முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் கொண்டுவருவதற்குக் கவனம் செலுத்து கிறேன் என்று சொல்லிக்கொள்கிறேன்.

**The motion was, by leave, withdrawn.**

## RESOLUTIONS.

### (1) CONSTITUTION OF A TAMIL POPULARISATION BOARD.

* SRI M. S. SELVARAJAN : Sir, I move the following resolution :—

"This House recommends to the Government to constitute a special Tamil Popularisation Board to popularise Tamil Language in non-Tamil speaking areas specially in places like Delhi, Calcutta and Bombay on the lines of the Hindi Prachar Sabha in Madras.".

கனம் சபாநாயகர் அவர்களே, தமிழ் மொழி பரப்பப்படுவதற்கு அல்லது அதனுடைய வளத்தையும், செழுமையையும் உணரச் செய்வதற்கு ஒரு குழு, ஒரு கமிட்டி, ஸ்பெஷலாக நியமிக்கப்பட வேண்டும் என்ற கருத்து என்னுடைய தீர்மானத்தில் தொனித்தாலும் கூட, அந்தக் கருத்து இன்றைய தினம் நாடு ஏற்றுக்கொண்டிருக்கக் கூடிய நல்ல ஒரு முடிவுக்கு மாறுதலானதாக இருக்கும், இருக்க வேண்டும் என்ற கருத்தோடு கொண்டுவரப்பட்டது அல்ல. இந்தி பிரச் சார சபா அமைப்பு போல இந்தத் தமிழ் வளர்ச்சி நிறுவனம் இருக்க வேண்டும் என்ற எண்ணம் என்னுடைய தீர்மானத்தில் வாசகத்தில் காணப்பட்டாலும் கூட, இந்தி பிரச்சார சபா அரசாங்கத்தினுடைய உதவிகளைப் பெற்று, தனிப்பட்ட முறையிலே ஒரு குழுவினால் இயக்கப்படு கிறது என்பதை நான் உணர்ந்தேதான் இருக்கிறேன். அது மாத்திர மல்லாமல் இந்தி பிரச்சார சபாவில் இருக்கக் கூடிய நடைமுறைகளைப் பார்த்தால் ஹிந்தி பிரச்சார சபா என்ற பெயரிடப்பட்டிருந்தாலும் கூட, தமிழ் பாஷையும் கூட இந்தியோடேயே சேர்த்து, இரண்டுக்கும் இருக்கக் கூடிய தொடர்புகளை, இணைப்பு-பிணைப்புகளையும் சேர்த்து தேசிய ஒருமைப்பாட்டுக்கு உகந்த முறையிலே இதைப் பரவச் செய்வது என்ற கருத்து இருக்கிறது என்பதை நான் உணருகிறேன். அந்தக் கருத்தை நானும் ஏற்றுக்கொண்டு, அந்தக் கருத்தின் அடிப்படையில் 'தமிழ் வளர்ச்சி நிறுவனம்' என்ற அமைப்பை ஏற்படுத்தலாம் என்று தெரிவித்துக்கொள் கிறேன்.

30th March 1963] [திரு. எம். எஸ். செல்வராஜன்]

கடந்த சில வருஷங்களுக்கு முன்பு இந்த ராஜ்ய அரசாங்கமே கூட தமிழ் டெவலப்மெண்ட் கவுன்ஸில் என்ற ஒன்றை நிறுவவேண்டுமென்ற ஒரு கருத்தை வைத்திருந்தது உண்டு. அதற்கு உரிய முயற்சிகள் ஏற்பாடுகள் எல்லாம் கூடச் செய்து கொண்டிருந்தது உண்டு. அந்த அளவுக்கு அதை விளம்பரமாக்க அல்லது பாப்புலரைஸாக்க என்ன ஏற்பாடு களெல்லாம் செய்யப்பட்டிருக்கின்றன என்று எனக்குப் பூர்ணமாக விவரங்கள் கிடைக்கவில்லை. இதைப் பற்றி விவரம் கிடைத்தால் கூட, அரசாங்கத்திற்குக் கிடைக்குமானால் கூட, அவர்கள் கொடுத்தால் நான் நன்றி உள்ளவனாக இருப்பேன். நான் அறிகிறேன், இந்த தேசம் ஏற்றுக் கொண்டிருக்கக்கூடிய வட்டார மொழிகளில், தேசீய மொழிகளில் நாம் வணங்கும் தமிழ் மொழியும் ஒன்று. தமிழ் மொழி எல்லா செழுமை களையும் கொண்டிருந்தாலும் கூட, தொன்மையைக் கொண்டிருந்தாலும் கூட, இனிமையைக் கொண்டிருந்தாலும் கூட, அதனுடைய முதுமையைப் போற்றினாலும் கூட, தமிழ் இந்த தேசம் முழுமைக்கும் ஒரு பொது மொழி யாக, தேச முழுமைக்கும் இந்தியை ஏற்றுக்கொள்ளும் நேரத்தில், தமிழ் மொழியை ஏற்றுக்கொள்ளக் கூடும், தமிழ் தேசம் முழுமைக்கும் ஒரு பொது மொழியாகக் கூடும் என்ற திண்ணமான எண்ணத்தோடு இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவரவில்லை. இந்தி மொழி இன்றைய தினம் இருக்கக்கூடிய வடிவத்திலே, இன்றைய தினம் இருக்கக் கூடிய அமைப் பிலேயே தான் தேச முழுமையும் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று இந்தியை தேசத்தின் பொது மொழியாகச் சிபாரிசு செய்த குழுவினரோ, தேசத்தின் பெரும் தலைவர்களோ, கூட்டுக் கூட்டங்களோகூட அத்தகைய எண்ணத்தைச் சொல்லவில்லை. நான் நம்புகிறேன், காலம் வரலாம். இன்னும் எதிர் காலத்தில் நாம் எதிர்பார்த்த இந்தி மொழியின் இலட் சணம் பூர்ணப் பொலிவுடன் இருக்கலாம். எல்லா பாஷைகளிலும் உள்ள வளங்கள், உவமைச் சிறப்புக்கள், இலக்கண நயங்கள், இலக்கிய நயங்கள், எல்லாம் அதற்குக் கிடைக்கச் செய்து, அவைகளையெல்லாம் தன்னுள் அடக்கிக் கொள்ளும் வடிவத்தில், அத்தகைய உருவத்தோடு தேசம் முழுமையும் ஏற்றுக்கொள்ளும் நிலைமையை, பக்குவமான நிலைமையை எதிர் காலத்தில் அது பெற வேண்டும். அது தேச முழுமைக்கும் ஏற்ற காலமாக இருக்கலாம். தேச ஒருமைப்பாட்டுக்கு உறுதுணை செய்யும் நல்ல காலமாக இருக்கும் அந்தக் காலம். அதிலும் இந்தி மொழியைப் பொது மொழியாக ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று சிபாரிசு செய்ததன் எண்ணமாக இருக்கும் அது என்று நான் நினைக்கிறேன். நான் நினைக் கிறேன்—அந்த லட்சியம் ஈடேற வேண்டுமானால் தமிழ் மொழி மாத்திர மல்லாமல், தமிழ் நாகரீகம், தமிழ் பண்பு, தமிழ் நயம், இதுபோல ஒவ்வொரு பாஷையிலும் இருக்கக் கூடிய நயங்களும் எல்லா வகைகளிலும் பெறப்பட்டு, தேச முழுவதிலும் ஆங்காங்கு உணரக் கூடிய சந்தர்ப்பம் கிடைக்கவேண்டுமென்பது என்னுடைய ஆசை. அந்த லட்சியம் ஈடேற தமிழ் பாஷையைப் பொறுத்த மட்டில் பல வருஷங்களாக முயற்சிகள் எடுத்து வந்திருப்பதை நான் உணருகிறேன். ராஜ்ய அரசாங்கம் உறு துணையாக சர்வகலாசாலைகளுக்கு, உஸ்மானியா சர்வகலாசாலை, டில்லி சர்வ கலாசாலை, கல்கத்தா சர்வகலாசாலை, கேரளா இங்கெல்லாம் இருக்கிற சென்னை வகுப்புக்கு, விசேஷ அமைப்புக்கு, உதவி செய்வதைக் கூட நாம் பார்க்கிறோம். அதற்கு உரிய க்ராண்டுகள் வழங்கப்படுகின்றன என்பதை நாம் அறிகிறோம். க்ராண்டு வழங்கும் முறைகளில், எனக்குத் தெரிந்த அளவில், கொடுத்து வருகிற உதவிகளெல்லாம் யாரோ சில படித்தவர்களு க்கு மாத்திரம் உதவக் கூடியதாக இருக்கலாம். மற்ற பாஷைகளைப் பேசக் கூடிய சாதாரணமானவர்களுக்குக் கூட, பாமர மக்களுக்குக் கூட, பயனுள்ளதாக, பாஷையைப்புரிந்து கொள்ளக் கூடிய, ஒருமைப் பாட்டை, உணரக் கூடிய அளவுக்குப் பிரசாரம் செய்து அவர்களுக்குச் சந்தர்ப்பத்தை கொடுக்கவேண்டியது அவசியம் என்று கூட நான் கருதுகிறேன். அந்த நிலைமையில்தான் இன்றைய தினம் இருக்கக்கூடிய யூனிவர்சிட்டி களுக்கு ராஜ்ய அரசாங்கம் உதவிக்கொண்டிருந்தாலும் கூட இன்னும் கூட ஆங்காங்கு இருக்கக் கூடிய தமிழ் சங்கங்கள், இன்றைய தினம் எல்லா பெரிய நகரங்களிலும் பார்க்கிறோம், பம்பாயில் இருக்கக் கூடிய தமிழ் சங்கம், பூனாவில் இருக்கக் கூடிய தமிழ் சங்கம், கல்கத்தாவில் இருக்கக் கூடிய தமிழ் சங்கம், டில்லியில் இருக்கக் கூடிய தமிழ் சங்கம், இவை

போன்றவைகளுக்கெல்லாம் பொது மக்கள் உதவி ஒரு பக்கம் இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் அரசாங்கம் எந்த அளவு உதவ வேண்டுமோ அந்த உதவி இதுவரையில் செய்திருந்தாலும் இன்னும் அதிகமாகச் செய்ய வேண்டும். நான் நினைக்கிறேன், இன்றைய தினம் இருக்கக் கூடிய அந்த யூனிவர்சிட்டிகள், தமிழ் சங்கங்கள், இவற்றிலே ஆங்காங்கே இருக்கக் கூடிய தமிழ் மக்களுக்கு உதவிகரமான முறையில் தமிழ் மொழிக்கும் அவர்களுக்கும் இருக்கக் கூடிய தொடர்பு விட்டுப் போகாமல் இருக்கக் கூடிய அளவுக்குச் சேவை செய்து வருகின்றன, அந்த முறையில் பயனுள்ளதாக இருக்கிறது என்று நான் நினைக்கிறேன். நம் எண்ணமும் அது தான் என்று நம்புகிறேன். சாதாரண மக்களுக்குக் கூட, மற்ற மொழி பேசுகிறவர்கள், தமிழ் மொழியில் இருக்கக் கூடிய மொழி ஒருமைப்பாடு, இலக்கிய ஒருமைப்பாடு போன்றவைகளை உணரும் நிலைமையை உண்டு பண்ணி விட்டால் வித்தியாசங்கள் கூட மறைந்து போகலாம்; எதிர்காலம் நல்ல காலமாக இருக்கலாம் என்று கருதுகிறேன். அவர்களுக்கு இன்றைய தினம் நம் தமிழ் பாஷையில இருக்கக் கூடிய சில பாடங்களை, பால பாடம் போன்றவைகளை எல்லா மொழிகளிலும் ஏற்படுத்திக் கொடுக்கலாம். ஹிந்தியில் **History of Tamil Literature** என்று ஒரு புத்தகம் வெளியிடப்பட்டது. அதிலே ஒரு குறிப்பிட்ட வாசகம் கண்டது. வள்ளுவர் காலம் 10-வது நூற்றாண்டு என்ற அந்தப் புத்தகத்தில் அம்மாதிரி குறிப்பு உடைய வாசகம் இருந்தது என்று காணக் கண்டது. தமிழர்கள் பற்றிய குறிப்புகள், தமிழர்கள் வளர்ச்சி இவைகள் போன்ற விஷயங்களைப் பற்றி சரிவர காரியங்களைச் செய்ய முறையாக, பழுதில்லாத நிலையில் பார்க்க ஒரு கண்காணிப்பு அவசியம் என்று நான் கருதுகிறேன். இன்றைய தினம் குறிப்பாக வட இந்தியா முழுவதிலும் பரந்து கிடந்து பணி செய்து கிடக்கும் சங்கங்களைத் தொகுத்துச் சேர்த்து ஒன்றாக வைக்கும் பண்பாடு இன்றையதினம் இல்லை. நான் விரும்புகிற இந்த அமைப்பு இவற்றையெல்லாம் வகுத்து, தொகுத்துச் செய்யக் கூடிய அளவுக்கு, பரப்பக் கூடிய அளவுக்கு ஆலோசனை சொல்லக் கூடிய நல்ல பணியைச் செய்து இந்த உதவியைப் பரவலாகச் செய்துகொடுத்து, பாஷையில் விற்பன்னர்களாக இருக்கிறவர்கள் மாத்திரம் என்று இல்லாமல் சாதாரண மக்கள் தமிழர் பண்புகளை, தமிழர் நற்குணங்களை பெரும்பாலும் உணர்வதைப்போல, தென்னிந்தியாவில் மற்ற மொழிகளைப் பேசுகிற மாதிரி நான் விரும்புகிற இந்த அமைப்பு இருந்தால் வழிகாட்டியாக இருக்கலாம் மற்ற பாஷையினருக்குக் கூட என்று கருதுகிறேன். இன்றையதினம் காலையிலே பத்திரிகையில் பார்த்தபோது, கேரளாவிலே மலையாள மொழியை மற்ற இந்திய மொழிகளுடனும் அன்னிய மொழிகளுடனும் நெருங்கிய உறவு கொள்ளச் செய்வதற்காக கேரள அகாடமி கவனம் செலுத்தி வருகிறது; இரு மொழி அகராதிகளுக்கும், மற்ற மொழிகளில் உள்ள புத்தகங்களை மலையாளத்தில் மொழி பெயர்க்க ஊக்கம் தர இந்த திட்டம் நோக்கமாக கொண்டிருக்கிறது என்றும் படித்தேன். அவர்கள் நோக்கம், தமிழ்-மலையாளம், கன்னடம்-மலையாளம், தெலுங்கு-மலையாளம், பிரெஞ்சு-மலையாளம், ஜெர்மன்-மலையாளம் என்று இருமொழி அகராதிகளை வளர்ச்சி செய்வது; இதற்கு அகாடமி நிதி உதவி அளிக்கும் என்று பத்திரிகையில் பார்த்தேன். தமிழ் மொழியையும் கூட உலக மொழிகளுடன் இணைக்கும் முயற்சி எடுக்கப்பட வேண்டியது அவசியமும், அவசரமும் கூட. தமிழின் அருமை பெருமைகளை ஒரு சிலர் மட்டுமன்றி, மற்றவர்களும் புரிந்து கொள்ளும் முறையிலே தமிழ்ச் சங்கங்களில் மற்றவர்களும் சேர்ந்து புரிந்து கொள்ளும் வகையிலே ஒரு நல்ல சூழ்நிலையை உண்டாக்கி, அதற்கு உதவிகரமாக ஒரு அமைப்புத் தேவை என்று கருதுகிறேன். அது எந்தப் பெயரில் அமைக்கப்பட்டாலும் பரவாயில்லை. அத்தகைய எண்ணம் ஒன்று நாட்டிலே பரவலாக் வளருவது ஒரு நல்ல எதிர்காலம் வளருவதற்கு, துவேஷம் இல்லாமல் தேசத்தின் ஒற்றுமைக்கு பாதை வகுப்பதாகும். அந்த நிலை உண்டாவதற்கு எல்லா மொழிகளும் தங்கள் தங்கள் பங்கை, தங்கள் தங்கள் கலாச்சாரப் பங்கைக் கொடுப்பது அவசியம் என்று கருதுகிறேன். அதே போன்று மற்ற தேசங்களில் நடந்து வருகிறது. உதாரணமாக ரஷ்யாவில் பல மொழிகள் பேசக் கூடிய பிரதேசங்கள் இருப்பதைப் பார்க்கிறோம். பல மொழிகள் இருந்தாலும் அங்கே ஒரு ரெஜிமெண்டட் ஸிஸ்டம் இருப்பதை

30th March 1963] [திரு. எம். எஸ். செல்வராஜன்]

காண்கிறோம். ஆங்காங்கே அத்தகைய பல பாஷைகளைப் பல ஆண்டுக் காலமாக பலப்பல பகுதிகளில் பல்வேறு நாகரிகம் கொண்ட மக்கள் கொண்டிருந்தாலும், அவற்றையெல்லாம் தொகுத்து கடினமான திட்டங்க கள் துணைகொண்டு சாதித்து இருக்கிறார்கள். ஜனநாயகம் வளரும் நம் நாட்டில், அறிஞர்கள் ஒரு சிலர் மட்டும் சேர்ந்து தேசத்தின் ஒற்றுமையை விதியை நிர்ணயம் செய்து விடுவது என்பதினால் மானசீகமான ஒரு ஒருமைப் பாட்டை ஏற்படுத்தலாம். ஆனால், மக்கள் பல்வேறு பகுதிகளில் இந்த ஒருமைப்பாட்டை உணர்ந்து கொள்ளக் கூடிய சூழ்நிலை வளரும் முறையில் செய்வது மட்டுமல்ல, அதை ஊன்றிப் பார்த்து எந்தக் கறுப்பும் அதைத் தீண்டாமல், எந்தத் தீமையும் அத்தகைய சக்தியை அடித்து, குலைத்து ஊறு செய்யாமல் நல்ல எண்ணத்தோடு ஒரு அமைப்பு முறை இயங்க வேண்டுவது அவசியம் என்பதுதான் இந்தத் தீர்மானத்தின் நோக்கம்.

சில பகுதிகளில் சில முயற்சிகள் நடக்கின்றன. பல முறை இந்த மன்றத்திலேயே எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. துளசிதாசருக்கும் கம்ப ருக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் பற்றிச் சொல்கிறார்கள். அத் தகைய புராண இதிகாசத்தை, பண்பை எடுத்துக் காட்டுகிறோம். பாரதி யாரும், வள்ளுவரும், கம்பரும், இளங்கோவும், ஜீவனுள்ள சிரஞ்சீவி படைப்புகள். அவை முக்கு முக்காகப் பரவவேண்டும். அந்தப் படைப்புக ளெல்லாம், நிலையாகப் பயன்படுத்தப்பட வேண்டும். இலக்கணத்தில், இலக்கியத்தில் உள்ள ஒருமைப்பாடுகளை அப்படிப்பட்ட அமைப்பின் மூலம் சுலபமாக இங்கும், எங்கும் இணைக்கும் நிலையை உண்டு பண்ணவே இந்தத் தீர்மானம். எனக்கு அரசாங்கத்திலிருந்தும், மற்றவர்களிடமிரு ந்தும் கிடைக்கக்கூடிய ஒட்டு வார்த்தைகள் அனுசரணைகளாக இருக்கும். அப்படிப்பட்ட கருத்துக்கள் எல்லாம், இந்த தேசம் ஒருமைப்பாட்டை அடையக்கிடைக்குமானால், அதிலேயே என் தீர்மானத்தை நிறைவேற்றிய மகிழ்ச்சி அடைவேன். இதை நிறைவேற்ற முழு முயற்சி எடுக்க வேண்டும். இந்தத் தீர்மானத்தில் உள்ள நல்ல கருத்துக்களை ஏற்று, அரசாங்கம் ஒரு நல்ல அமைப்புபற்றி சிந்திப்பது நல்லது. இதை சபை ஏற்க வேண்டும் என்று விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

The resolution was duly seconded.

* **திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, தமிழ் மொழி பிரசாரக் குழு வேறு மாநிலங்களிலும் அமைக்கவேண்டும் என்று கனம் அங்கத் தினர் திரு. செல்வராஜன் கொண்டு வந்திருக்கும் தீர்மானத்தை ஆதரித்து சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். தமிழகத்தில் இந்திபிரசார சபை என்ற பெயரில் நடைபெறும் நிறுவனம் இந்தியை தமிழகத்தில் திணிக்க வேண்டும் என்று நடைபெறும் முயற்சிக்கு ஆதரவாக நடைபெறுவதுபோல் இல்லாமல், தமிழை வேறு மாநிலங்களில் பரப்ப வேண்டும் என்று சொல்லப்படுகிற கருத்து வேறு மாநிலங்களின் மக்கள் மீது தமிழைத் திணிக்க வேண்டும் என்கிற தீய நோக்கோடு அல்ல என்பதை நாம் உணரவேண்டும். திரு. நண்பர் செல்வராஜன் எடுத்துக் காட்டியதுபோல, தமிழிலேயே நிறைய இலக்கியங்கள் உண்டு. சொல் வளம் உண்டு. கல் தோன்றி மண் தோன்றா காலத்தே முன் தோன்றி மூத்த குடியினரின் மொழி தமிழ் மொழி. இலக்கியச் செறிவும், பண்பாட்டுச் செறிவும் மிக்க மொழி ஆகும் தமிழ் மொழி. மக்களை வாழ்வித்த மொழி, நல்ல பண்பாட்டை உலகத்திற்கு அறிவித்த மொழி தமிழ் மொழி ஆகும். அப்படிப்பட்ட மொழி நிலவும் பகுதிகளிலும், தமிழகத்திலேயும் மட்டுமல்லாமல், அண்டை நாடுகளிலும், மாநிலங்களி லும், அந்த மொழியைப் பரப்ப வேண்டும் என்ற நோக்கோடு இந்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஒரே ஒரு இலக்கியத்தை, துளசி தாஸ் இராமாயணம் ஒன்றை மட்டும் தன்னகத்தே கொண்டிருக்கும் இந்திக்கு இந்த துணைக்கண்டம் பூராவும் பிரச்சாரசபைகள் இருக்கும் போது, வளையாபதியும், சீவக சிந்தாமணியும், குண்டலகேசியும், மணி மேகலையும், சிலப்பதிகாரமும், அகமும், புறமும், கலித் தொகையும் இன்னோரன்ன பிறவும் இலக்கிய வளம் பெற்றிருக்கிற நம் தமிழை, அணைத்துக்கும் மேலாக திருக்குறளைப் பெற்றிருக்கும் தமிழை பரப்பும் பிரசார சங்கங்கள் வேறு மாநிலங்களில் இல்லாதது பெரும் குறை. அந்தக்

[திரு. மு. கருணாநிதி] [30th March 1963

குறையைச் சுட்டிக்காட்டுவது இந்தத் தீர்மானத்தின் முக்கிய நோக்கம் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். இன்றையதினம் நம்முடைய தமிழகத்தில் இந்தியினுடைய தன்மையை, வளத்தை, அந்த மொழியில் ஆர்வத்தை தமிழரும் பெறவேண்டும் என்று இந்தி பிரச்சாரசபை பணிகளில்
10–30 a.m. தமிழர்களும் ஈடுபடுகிறார்கள். ஆனால், வேறு எந்த மாநிலங்களிலும் தமிழை வளர்த்துக் கொள்வோர்கள் அந்தந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல. நம் மாநிலத்திலிருந்து பிழைப்பிற்காக, வேலைக்காக, பம்பாய், கல்கத்தா ஆமதாபாத், டெல்லி போன்ற இடங்களிலே நம் மாநிலத் தமிழர்கள் ஆங்காங்கே தங்களுக்கு இருக்கக் கூடிய தமிழ் ஆர்வத்தைப் பெருக்கிக் கொள்ளவென்று அந்த தமிழ் சங்கங்களை உருவாக்கி இருக்கிறார்கள், பிரசாரம் செய்யும் சங்கங்களாக உருவாக்கிப் பணிபுரியவில்லை. இன்னும் குறிப்பாகவும், சிறப்பாகவும் சொல்லவேண்டுமானால் நான் கொஞ்சம் சினிமா துறையைப் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். அதுபற்றி யாரும் தவறாகக் கொள்ளமாட்டார்கள் என்று நம்பிக்கையோடு கூறுகிறேன். இந்திப் படங்களை தமிழ் நாட்டில் எல்லோரும் பார்ககிறார்கள். இந்தி படித்தவர்கள் அல்லது இந்தி மொழியை உணந்தவர்கள்தான் அந்தப் படங்களை பார்க்கிறார்கள் என்று இல்லாமல் இந்தித் திறைத் துறையிலே நல்ல நடிகர்கள் நடித்த படமாக இருந்தால், இந்தியில் நல்ல இசைவாணர்கள், பாடகர்கள் இசை அமைத்த படங்களாக இருந்தால், தமிழகத்தில் தமிழர்கள் அந்தப் படங்களை ஆர்வத்தோடு சென்று பார்க்கிறார்கள். ஆனால் தமிழ் படங்கள், தமிழ் நடிகர்கள் நடித்த படங்கள் இந்தி வழங்குகின்ற பகுதிகளில் அல்லது வேறு மாநிலங்களில் நடக்கின்றனவா என்றால், பம்பாய், ஆமதாபாத் போன்ற தமிழர்கள் இருக்கின்ற இடங்களில் ஒரு நாள் காலைக் காட்சியாகவோ அல்லது ஒரு வாரக் காட்சியாகவோ தான் அந்தப் படங்கள் வெளியிடப்படுகின்றன. தமிழ் நடிகர்கள், உயர்ந்த நடிகர்கள், நட்சத்திர மதிப்புப் பெற்றிருக்கிற நடிகர்கள் நடித்த படங்கள் இந்தி மொழி பேசப்படுகிற பிராந்தியங்களில் ஓடுவதற்கு வழி வகை செய்யப்பட்டிராத நிலைமை இருக்கிறது. அந்த நிலைமையிலே மாற்றம் காணவேண்டும். இந்த அரசினர் சிபார்சு செய்தாவது தமிழ் நாட்டில் வெற்றிகரமாக ஓடுகிற தமிழ் படங்கள், நட்சத்திர மதிப்பு பெற்றிருக்கிற நடிகர்கள் நடித்திருக்கிற தமிழ் படங்கள் அந்தப் பகுதிகளில் வேறு மாநிலங்களில் ஓடுவதற்கும், அந்த வகையிலே தமிழ் ஒலியையும், ஒலியில் கிளம்புகின்ற வீரத்தையும், அதனால் கிடைக்கின்ற கனிவையும் தமிழ் இனிமையையும் மற்றவர்கள் உணர்கின்ற அளவுக்கு அந்தப் பொறுப்புக்களை நிறைவேற்றுகின்ற காரியத்தில் ஈடுபடலாம். இப்படிப் பல கோணங்களில் தமிழைப் பிரசாரம் செய்வதற்காக நல்ல பல நிறுவனங்களை வேறு மாநிலங்களில் அமைக்கவேண்டும் என்று குறிப்பிட விரும்புகிறேன். இந்தத் தீர்மானம் மிக முக்கியமான தீர்மானம் என்ற அளவிலே நம்முடைய நண்பர் திரு. செல்வராஜன் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானத்தை முழு மனதுடன் ஆதரித்து, இதை நிறைவேற்றித்தரவேண்டும் என்று ஆளும் கட்சியினரைக் கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

***கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் திரு. செல்வராஜன் அவர்கள் கொண்டு வந்திருக்கிற, தீர்மானம், மற்ற மாநிலங்களிலே தமிழைப் பாராட்டி, உணர்ந்து அனுபவிக்கக்கூடிய வகையிலே இந்த அரசாங்கம் அதற்கென்று ஒரு தனிக் குழு அமைக்கவேண்டும் என்பதுதான். அதைத்தான் அவர் முக்கியமாக குறிப்பிட்டிருக்கிறார். இந்திக்காக இந்தி பிரசார சபா சென்னையில் எவ்வாறு பணி புரிகின்றதோ அதே வகையிலே டெல்லி, கல்கத்தா பம்பாய் போன்ற நகரங்களில் தமிழுக்காக ஒரு அமைப்பை அமைக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். கனம் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும் அதை ஆதரித்துப் பேசினார்கள். ஒன்று முதலிலேயே கூற விரும்புகிறேன். இந்தி பிரசார சபையின் பணியைப் பொறுத்த மட்டில், கனம் அங்கத்தினர் அவர்களை இந்திப் பிரசார சபையின் சார்பாக அழைக்கிறேன். அவரே அந்த இந்தி பிரசார சபைக்கு வந்து, வேறு முன்னதாக இருக்கிற கருத்துக்களை மறந்து, கொஞ்சம் தள்ளிவைத்துவிட்டு, அங்கே நடைபெறுகிற வேலைகளைக் கொஞ்சம் தெரிந்துகொள்ளவேண்டும். வேண்டுமானால், நானும் அவர்களோடு அப்போது இருக்கிறேன். இந்தியைத்

30th March 1963] [திரு. எம். பக்தவத்சலம்]

திணிக்கிறது என்பது அல்ல. இந்தி பிரசாரசபை என்று போட்டிருக்கிறார்கள். அவர்கள் மகத்தான பணி புரிகின்றார்கள். பலபேர்கள் தமிழகத்தில் கட்டாயம் இல்லாமல் இந்தி கற்றுக்கொண்டிருக்கிறார்கள். அது மாத்திரமல்ல. கனம் அங்கத்தினர் திரு. செல்வராஜன் என்ன கருத்தோடு இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்தாரோ அந்த வேலையைத்தான் இந்தி பிரசார சபை இப்பொழுது செய்துகொண்டிருக்கிறது. இந்தி பிரசார சபை வெளியிடுகிற பத்திரிகைகளைப் பார்த்திருக்கலாம். இந்தியிலே தமிழ் இலக்கியத்தை, தமிழின் அருமை பெருமையை விளக்கும் அத்தனை நல்ல கட்டுரைகள் எல்லாம் வந்திருக்கின்றன, தமிழ் வரலாறெல்லாம் இந்தியில் வந்திருக்கிறது. அவ்வாறு வட நாட்டில் உள்ளவர்கள், இந்தியை தாய் மொழியாகக் கொண்டவர்கள் தமிழின் அருமை பெருமையை நன்றாக உணர்ந்து கொள்ளவேண்டும் என்ற வகையிலே தக்ஷிணபாரத இந்தி பிரசார சபா அக்கறை செலுத்துகிறது. பிரசாரம் செய்கிறது. தெலுங்கிலும் அக்கறை செலுத்துகிறது. மலையாளத்திலும் அக்கறை செலுத்துகிறது. கன்னடத்திலும் அக்கறை செலுத்துகிறது. தமிழுக்காக வட நாட்டிலும் அவர்கள் பிரசாரம் செய்துவருகிறார்கள் என்று குறிப்பிட விரும்புகிறேன். (திரு. ஆர். வி. சுவாமிநாதன் குறுக்கீடு) பல மொழிகளிலும் வந்திருக்கிறது. இந்தியிலும் வந்திருக்கிறது. எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் ஏதோ டெல்லியில் இருக்கிற தமிழர்கள் தாங்கள் தாங்களாகவே தமிழை அனுபவிக்கவேண்டுமென்பதற்காக குழுக்கள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள், அது மட்டும் போதாது என்று சொன்னார்கள். ஆனால், நான் ஒன்று கூற விரும்புகிறேன். டெல்லி, கல்கத்தா, பம்பாய் போன்ற இடங்களில் நான் கவனித்ததிலே, அங்கு இருக்கிறவர்களுக்கு இங்கு நமக்கு இருக்கிற தமிழ் ஆர்வத்தைவிட அதிகமாக இருக்கிறது, அதிக அக்கறை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள், அதிகமாக அனுபவித்து வருகிறார்கள் தமிழை. ஆனால், இந்தியை தாய் மொழியாகக் கொண்டவர்கள் கூட தமிழைப் புறக்கணிப்பதில்லை. தமிழை அனுபவிக்க முற்படுகிறார்கள். சில இடங்களில் நான் கவனித்திருக்கிறேன். சில ஆண்டுகளுக்கு முன்பு உதயபூருக்குப் போயிருந்தேன். அது ராஜஸ்தானில் இருக்கிறது. அசல் இந்தி பேசப்படுகிற மாநிலம் அது. அந்த நகரத்திற்குப் போயிருந்தேன். நான் ஒரு கலைப் பள்ளியைப் பார்க்க வேண்டும் என்று அவர்கள் என்னை அழைத்துச் சென்றிருந்தார்கள். எனக்காக பல நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். அதிலே பரத நாட்டியம் நடைபெற்றது. அந்த பரத நாட்டியத்திலே தமிழ் பாட்டு பாடப்பட்டது வட நாட்டிலே. அங்கே உள்ள குழந்தைகள் ஆடினார்கள், அழகாக ஆடினார்கள். தமிழ் பாட்டு சொல்லிக்கொடுப்பதற்கு தமிழ் நாட்டில் அடையாற்றிலிருந்து தேர்ச்சிப் பெற்ற ஆசிரியரை தமிழரை அழைத்து சென்று அந்தக் குழந்தைகளுக்கு அழகாக தமிழ்ப்பாட்டு கற்றுக்கொடுத்திருக்கிறார்கள். அழகாக தமிழில் பாடினார்கள். நல்ல உச்சரிப்பு. தமிழில் பாடி நடனம் ஆடினார்கள். அதைப் பார்த்தேன் இதையெல்லாம் கனம் அங்கத்தினர் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். டெல்லியில் ஒரு சபை இப்பொழுது இருக்கிறது. தமிழ் பேசுகிறவர்களுக்கு இந்தியிலே அக்கறை ஏற்படவேண்டும், அவர்கள் இந்தியிலே அக்கறை செலுத்தவேண்டும், இந்தியை அனுபவிக்க முற்படவேண்டும், அதே மாதிரி இந்தி பேசுகிறவர்கள் தமிழை நன்றாக அனுபவிக்கவேண்டும் உணர வேண்டும் என்ற நோக்கத்தோடு ஒரு குழு இருக்கிறது. நானே அந்தக் குழுவில் பேசினேன். நான் தமிழிலே பேசினேன். இந்தியிலே பாண்டித்தியம் பெற்றவர்கள் தமிழைப்பற்றி பேசினார்கள். அவர்கள் இந்தியிலே பேசினார்கள். சில பேர்கள் இந்தியை தாய் மொழியாகக் கொண்டவர்கள் தமிழிலே நன்றாக பேசக் கூடியவர்கள் இப்பொழுது இருக்கிறார்கள்.

அதோடு, படத்தைப்பற்றிச் சொன்னார்கள், தமிழ் படம் ஏதோ காலையில்தான் காட்டுகிறார்கள் என்று சொன்னார்கள். பட்த்தைப் பற்றி எனக்கு ஆசை இருக்கிறது, அதை எப்படி செய்யவேண்டுமென்ற ஆசை எனக்கு இருக்கிறது. ஆனால் அதை நிறைவேற்றக்கூடிய ஆற்றல் எனக்கு இல்லை. அந்த ஆற்றல் எதிர்கட்சி துணைத் தலைவர் அவர்களுக்கு இருக்கிறது. அவர்கள் இதில் அதிக ஊக்கம் எடுத்துக்கொள்பவர்

கள். எந்தப் படமாக இருந்தாலும், இந்திப் படமாக இருந்தாலும், நல்ல படமாக இருந்தால் பார்க்கிறார்கள். ஆங்கிலப் படத்தையும் பார்க்கிறார்கள். அம்மாதிரி இந்திப் படத்தைப் பார்ப்பதில்லை. தமிழ் படம் எந்தப் படமாக இருந்தாலும், தமிழ் படத்தைப் பார்க்கிறார்கள். ஆங்கிலப் படத்தை அதிகமாகப் பார்க்கிறார்கள் என்றால், அதிலே தரம் உயர்ந்திருக்கிறது. ஆகவே, ஆங்கிலப் படத்தின் தரத்தின் அளவிற்கு தமிழ்ப் படத்தின் தரத்தையும் உயர்த்த வேண்டும். ஆங்கிலப் படத்தின் தரம் உயர்ந்திருக்கிறது, அந்த அளவு தரத்தை தமிழ் படம் எட்டவில்லை என்று சொன்னால் கனம் அங்கத்தினர்கள் என் மீது கோபித்துக்கொள்ளக் கூடாது. அந்தத் தரத்தை தமிழ் படத்திலும் எட்டுவதற்கு முயற்சிக்கவேண்டும், முயற்சிக்கப்பட்டு வருகிறது. நான் ஒரு தமிழ் படத்தை தமிழ் நாட்டில் பார்க்கவில்லை. டெல்லியில் பார்த்தேன். மாலை வேளையில் பார்த்தேன், அன்று ஒன்றும் வேலை இல்லாமல் இருந்தது. தமிழ் படம் பார்ப்பதற்கு ரொம்ப ஆசைதான். அந்தப் படத்தை நான் பார்த்தேன் டெல்லியில். அம்மாதிரி படங்கள் வட நாட்டில், இந்தி பேசப்படுகிற, தமிழ் பேசப்படாதப் பிராந்தியங்களில் அதிகமாக காட்டப்பட வேண்டும் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் அது எப்பேர்ப்பட்ட படம் அங்கு போகிறது என்பதைப் பொறுத்திருக்கிறது. படம் அங்கே போனால் பார்க்கக் கூடிய படமாக இருக்கவேண்டும். கனம் அங்கத்தினர் அவர்களுக்கு நல்ல அனுபவம் இருக்கிறது.

படம் நல்ல படமாக இருக்கவேண்டும், சிறந்த நடிகர்கள் நடிக்கிற படமாக இருக்கவேண்டும். சில சமயத்தில் சிறந்த நடிகர்கள் நடிக்கின்ற படங்கள் கூட வெற்றிகரமாக ஓடுவதில்லை. படத்தினுடைய (தீமை) **'Theme'** பொறுத்திருக்கிறது, நடிகர்களைப் பொறுத்திருக்கிறது, பட அமைப்பைப் பொறுத்திருக்கிறது. மூன்றும் சேர்ந்து நன்றாக அமைய வேண்டும். தமிழ் நாட்டு மக்கள் நல்ல ரசிகர்கள். சிறந்த ரசிகர்கள். மற்ற மாநிலங்களிலும் மக்கள் அப்படியேதான் இருப்பார்கள் என்றுதான் கொள்ளவேண்டும். ஆகவே, அவர்கள் தாய் மொழியில் இருக்கிற படம் இல்லாமல், வேறு மொழியில் உள்ள படமாக இருந்தால், தமிழ் படமாக இருந்தால் கூட, நல்ல படமாக எடுக்கவேண்டும். நாம் இதெற்கென்றாவது, மற்ற மாநிலங்களில் உள்ளவர்கள் பார்ப்பதற்கு என்றாவது தகுந்த முறையில் கதை எழுதி, நல்ல நட்சத்திரங்களைப் போட்டு சிறப்பான முறையில் படம் எடுக்க வேண்டும். அதற்குத்தான் முயற்சி செய்ய வேண்டும். நான் சொல்லலாமே தவிர, அதை நிறைவேற்றக்கூடியவர்கள் இங்கே எதிர்க்கட்சியில் இருக்கிறார்கள்.

**திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அடுத்த மாநிலங்களுக்குத் தேவையான படங்களை நாங்கள் தயாரிக்க வேண்டுமென்று சொன்னார்கள். நான் தணிக்கை அதிகாரிகளுடன் பேசிக் கொண்டிருந்த நேரத்தில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியைப் பற்றிக் குறிப்பிட ஆசைப்படுகிறேன். தமிழ்ப் படங்களில் இருக்கிற காட்சியோடு இந்திப் படங்களில் இருக்கிற காட்சியை ஒப்பிட்டு இந்தி படத்திலே தரக்குறைவான காட்சிகளை அனுமதிக்கிறீர்களே, அதே சென்சார் போர்டுதானே தமிழ்ப் படங்களில் அதுமாதிரியான காட்சி வந்தால் ஏன் அனுமதிக்கிறதில்லை என்று தணிக்கை அதிகாரிகளைக் கேட்டேன். அதற்கு தணிக்கை அதிகாரி, அந்தக் கலாச்சாரம் வேறு, இந்தக் கலாச்சாரம் வேறு என்று சொன்னார்கள். அமைச்சர் குறிப்பிடுகிறபடி பார்த்தால் தரக்குறைவான படங்களை எடுத்துத்தான் அனுப்ப வேண்டியிருக்கும் என்று வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அப்படி இல்லை. ஆங்கில நாட்டு—மேல் நாட்டு கலாச்சாரத்திற்கும் இந்த நாட்டு கலாச்சாரத்திற்கும் வித்தியாசம் இருக்கிறது. இருந்தாலும் நல்ல ஆங்கிலப் படங்களை இங்கே ஓரளவு கூட்டம் கூடி அனுபவிக்கிறார்கள். சில நாட்களுக்கு முன்பு இங்கே இங்கிலாந்திலிருந்து ஒரு நாடகக் குழு வந்து இங்கே நாடகம் நடத்தினார்கள். "ஹாம்லெட்" நடத்தினார்கள். அதிலே "கோஸ்ட்" **(Ghost)** வருகிறது. இங்கெல்லாம் பகுத்தறிவுள்ளவர்கள் கோஸ்டுகளை

30th March 1963] [திரு. எம். பக்தவத்சலம்]

நம்பாதவர்கள். அங்கும் நம்புகிறவர்கள் இருக்கிறார்கள். அது வேறு விஷயம். ஷேக்ஸ்பியர்—உலக கவி—அவர்கள் இயற்றிய நாடகம். சிறப்பாக நடத்தினார்கள். நல்ல கூட்டம் கூடியது. அண்ணாமலை மன்றமே கொள்ளவில்லை. சிறந்த முறையில் நடத்தினார்கள். அதைப் பார்த்து இங்குள்ள மக்களெல்லாம் ரசித்தார்கள். இங்குள்ளவர்கள் கூட நல்ல தரமுள்ள படமாக இருந்தால் அதை ரசிப்பார்கள். அதற்குக் கொஞ்சம் பிரத்தியேகமாக ஆற்றல் உள்ளவர்கள் கவனம் செலுத்த வேண்டும். நாம் போய் அது நல்ல படம் என்று திணிக்க முடியாது. இந்தி பிரச்சார சபா இந்தியைத் திணிக்கவில்லை என்று சொன்னேன். நல்ல படமாக இருந்தால் நாம் மட்டும் அனுபவித்தால் போதாது. நம்முடைய தமிழ் கலையின் அருமையை மற்றவர்கள் உணரச் செய்யவேண்டுமென்பதை ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான். படங்கள் மூலமாக மட்டும் நாம் ஏற்றுக் கொள்ளச் செய்ய முடியாது.

இப்போது சாதாரணமாக டில்லியிலே ஒரு சிறந்த பள்ளி இருக்கிறது. பல பள்ளிகளை நம் தமிழ் நாட்டிலிருந்து போனவர்கள் அக்கறையோடு நடத்திக்கொண்டிருக்கிறார்கள். நல்ல சிறந்த ஸ்தாபனங்கள் அவைகள். தமிழர்கள் மட்டுமில்லாமல் வேறு மொழி பேசுகிறவர்களும் அங்கு இருக்கிறார்கள். அந்தப் பள்ளிகளுக்கு நாம் உதவி அளித்திருக்கிறோம். பம்பாயில் ஒரு சிறந்த பள்ளி இருக்கிறது. அந்தப் பள்ளிக்கு உதவி அளித்திருக்கிறோம். நாக்பூரில் இருக்கிறது. அந்தப் பள்ளிக்கும் உதவி அளித்திருக்கிறோம். அதோடு நான் முன்பு இந்த மன்றத்தில் குறிப்பிட்டது போல பல பல்கலைக்கழகங்களுக்கு உதவி அளித்திருக்கிறோம். அதே மாதிரி மாஸ்கோ, ஆக்ஸ்போர்டு போன்ற நாடுகளிலும் தமிழ் கற்றுக் கொள்ளப்பட்டு வருகிறது. அங்கேயெல்லாம் கூட தமிழ் பரப்பப் பட்டு வருகிறது என்று பார்க்கும்போது நாம் எல்லோரும் பெருமை அடைகிறோம். அதில் மேலும் மேலும் அக்கறை செலுத்துவோம். ஆனால் தமிழை மற்ற மாநிலங்களில் பாபுலரைஸ் செய்வதற்காக ஒரு குழு என்றால், நான் ஒன்று சொல்வேன்—தப்பிதமாக எடுத்துக்கொள்ளக் கூடாது ; கோபித்துக் கொள்ளக் கூடாது ; இதுதான் சிறந்த கருத்து, தமிழை எங்கெல்லாம் பாபுலரைஸ் செய்வதென்றால் தமிழ் பேசாத இடங்களில் அல்ல—இப்போது ஒரு நிலை, கேவலமான நிலை என்னவென்றால் நம்மிடையே பாபுலரைஸ் செய்ய வேண்டிய நிலை இருக்கிறது. எதிர் கட்சித் துணைத்தலைவர் அவர்கள் கூறினார்களே, சிறந்த இலக்கியங்கள் என்று. அவைகளை இங்கே எத்தனை பேர்கள் படித்திருப்பார்கள் ? அவைகளை எத்தனை பேர்கள் படிக்க முன் வருகிறார்கள் ? எத்தனை பேர்கள் கல்லூரிகளில் வைத்ததில் படித்திருக்கிறார்கள் ? இங்கேயே படிக்கவில்லை. இங்கேயே தமிழின் அருமையை மாணவர்களெல்லாம்—நாம் இல்லை என்றாலும்—மாணவர்களெல்லாம் உணர்ந்து பயனடையவில்லை. ஆகையினால் வெளி மாநிலங்களில் அக்கறை செலுத்த வேண்டாமென்று சொல்லவில்லை. அக்கறை செலுத்தப்பட்டுதான் வருகிறது. மேலும் அக்கறை செலுத்தப்படும். ஆனால் அங்கத்தினர்—இந்தத் தீர்மானத்தை பிரேரேபித்த அங்கத்தினர்—கூறியபடி இதற்கென்று ஒரு போர்டு தேவையில்லை.

தமிழ் டெவலப்மெண்ட் கவுன்சில் பற்றி குறிப்பிட்டார்கள். இப்போது நடைபெற்றுக்கொண்டு வருகிறது. பீரோ ஆப் தமிழ் பப்ளிகேஷன்ஸ் என்று இருக்கிறது. புத்தகங்கள் வெளியிட்டு பணியாற்றிக் கொண்டு வருகிறது. தமிழ் டெவலப்மெண்ட் அன்ட் ரிசர்ச் கவுன்சில் என்று வேறு ஒன்று இருக்கிறது. இவையெல்லாம் பணியாற்றிக்கொண்டு வருகின்றன. கல்கத்தாவில் தமிழ் சங்கம் ஒன்று சிறந்த வகையில் பணியாற்றி வருகிறது. சில மாதங்களுக்கு முன்பு அந்தச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் இங்கே வந்து ஒரு விழாவில் கலந்து கொண்டபோது அந்தச் சங்கத்தின் சார்பாக ஒரு யோசனை கூறினார்கள். " கல்கத்தா பல்கலைக்கழகத்தில் தமிழுக்கு ஒரு சேர் (Chair) அமைக்க வேண்டும். அதற்காக உங்கள் அரசாங்கம் உதவி அளிக்க வேண்டும் " என்று சொன்னார்கள். அப்போதே சொன்னேன், அப்படி பல்கலைக்கழகம் முன் வந்தால் வேண்டிய உதவிகளை அளிக்க நாங்கள் முன்வருவோம் என்று. அவ்வாறு மேலும் மேலும் உதவிகள் அளிக்கப்

பட்டு வருகின்றன. அதற்கென்று ஒரு தனி குழு அமைக்கவேண்டியது இல்லை. அதுவும் தமிழ் பாபுலரைசேஷன் போர்டு என்றால் நாமே பறைசாற்றுவதுபோல் இருக்கும். நாம்தான் படிக்கவில்லை என்றால் நீங்களாவது படியுங்கள் என்று சொல்வதுபோல இருக்கும். அரசாங்கம் இதுகுறித்து நல்லமுறையில் அக்கறை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். தமிழுக்கு நல்லமுறையிலே மேலும் மேலும் ஊக்கம் அளிக்கிறோம். ஆகையால் இந்தத் தீர்மானத்தை வற்புறுத்த வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

SRI M. S. SELVARAJAN : Mr. Speaker, Sir, I am convinced by the Hon. Minister's reply. So I do not press my resolution.

The resolution was, by leave, withdrawn.

(2) EFFECTIVE IMPLEMENTATION OF PROHIBITION.

**திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் சபாநாயகர் அவர்களே, என்னுடைய தீர்மானத்தை நான் பிரேரேபிப்பதற்கு முன்னால் என்னுடைய தீர்மானத்திற்கே ஒரு பெரிய ஆபத்து வந்திருக்கிறது. இங்கே கொடுக்கப் பட்டிருக்கிற தாளில் ஆங்கிலத்தில் அந்தத் தீர்மானம் சரியாகவும், அதுவே தமிழிலே நேர்மாறான கருத்தைத் தெரிவிப்பதாகவும் இருக்கிறது. கனம் சபாநாயகர் மூலமாக . . . . .

MR. SPEAKER : What is the difficulty with the hon. Member, Sri K. A. Mathialagan? Let him read the Tamil version of the resolution.

SRI K. A. MATHIALAGAN : I will read the English version, Sir.

MR. SPEAKER : I have read the English version. Let the hon. Member, Sri K. A. Mathialagan read the Tamil version of the resolution.

SRI K. A. MATHIALAGAN : The first part reads that this House approves the stand taken by the Government with regard to 'Prohibition.' I agree with the Hon. Minister's policy. But the second part of the resolution has not been translated properly. In this connection, I submit, Sir, that this resolution should be split into two parts. So far as the first part is concerned it is correct. The second part of the resolution is not correct. So the Department may kindly be asked to translate it correctly.

MR. SPEAKER : I presume that the Hon. Member, Sri K. A. Mathialagan wants that vigorous steps be taken to effectively implement the same.

SRI K. A. MATHIALAGAN : Yes, Sir. It is all right in English.

" மதுவிலக்கு குறித்தும் அதைத் தீவிரமாக அமலாக்குதல் குறித்தும் அரசினர் மேற்கொண்டுள்ள நிலையை இச்சபை அங்கீகரிக்கிறது " என்று இருக்கிறது. எப்படி இருக்க வேண்டுமென்றால் " மது விலக்கு குறித்து சர்க்கார் கொள்கையை இந்தச் சபை அங்கீகரிக்கிறது. ஆனால் செவ்வையான முறையில் அமல்படுத்த தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த மன்றம் வற்புறுத்துகிறது " என்று இருக்கவேண்டும். " மதுவிலக்கு குறித்தும் அதைத் தீவிரமாக அமலாக்குதல் குறித்தும் சர்க்கார் மேற்